ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1901/9 - 2015 පෙබරවාරි මස 10 වැනි අඟහරුවාදා - 2015.02.10

*1901/9 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை தொல்பொருளியலாளர் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டம்**

1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை தொல்பொருளியலாளர் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 06 (01) ஆம் பிரிவின் கீழ் 1995ஆம் ஆண்டு சனவரி மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 854/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை தொல்பொருளியலாளர் மன்றம் என்ற பெயரில் ஆக்கப்பட்ட விதிகள் மன்றத்தின் ஆணைப்படி இரத்துச் செய்யப்படுவதுடன் இலங்கை தொல்பொருளியலாளர் மன்றம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட புதிய விதிகள் ஆக்கப்படுகின்றன.

மன்றத்தின் ஆணைப்படி,

பேராசிரியர் காமினி அதிகாரி,<br>
தலைவர்,<br>
இலங்கை தொல்பொருளியலாளர் மன்ற<br>
ஆளுநர் சபை.

தொல்பொருளியல் திணைக்களம்,<br>
கொழும்பு 07,<br>
2015, பெப்புருவரி 10.

இலங்கை தொல்பொருளியலாளர் பேரவை சட்டத்தின்<br>
6(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்ட புதிய விதிகள்

1. (அ) இவ்விதிகளின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பரீட்சையில் அல்லது அவற்றுக்குச் சமமானது என மன்றம் மூன்றில் இரண்டு பெரும்பாண்மையால் நிறைவேற்றிய தீர்மானம் குறிப்பிட்ட பரீட்சை அல்லது பரீட்சைகளில் தேறிய எந்நபரையும் ஆளுநர் சபை (இதனகத்துக்குப் பின்னர் சபை என அறிமுகப்படுத்தப்படும்) மன்றத்தின் கூட்டு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளச் செய்யும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது நிறுவனத்தில் தொல்பொருளியல் துறையில் பட்டப்பின் படிப்புப் பட்டம் அத்துடன் சகா (முக்கிய) உறுப்பினரின் மேற்பார்வையின் கீழ் தகுதியான அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் தொல்பொருளியலாளராக பணியில் இரண்டு வருடகால அனுபவத்தைப் பெற்றுள்ள ஒருவரை மன்றத்தின் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளச் செய்யும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*
2 - PG 2362

(இ) பத்து வருடங்களுக்கு மேல் மன்றத்தின் உறுப்பினராக இருந்துள்ள ஒருவரை மன்றத்தின் முக்கிய உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளச் செய்யும்.

2. (அ) கௌரவ, பதிவு செய்யப்பட்ட, மாணவர் உறுப்பினர்கள் மன்றத்தில் இணையுரிமையற்ற உறுப்பினர்களாக இருப்பர். இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

(ஆ) மன்றத்துக்கு அல்லது தொல்பொருளியல் பணியில் மகத்தான சேவையாற்றிய எவரையும் மன்றத்தின் கௌரவ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆயினும், எவ்வேளையிலும் மொத்தம் பத்து கௌரவ உறுப்பினர்களைக் கொண்டிராதவாறு வருடம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கௌரவ உறுப்பினருக்கு மேல் சபை சேர்க்காது இருத்தல் வேண்டும்.

(இ) இவ்விதிகளின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் தேறியுள்ள எவரும் தொல்பொருளியல் நிறுவனம் ஒன்றில் அல்லது தொல்பொருளியல் திணைக்களத்தில் அல்லது அவற்றுக்குச் சமமானது என மன்றத்தினால் ஏற்றக்கொள்ளப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தில் தொல்பொருளியல் துறையில் குறைந்தது தொடர்ந்தாற்போல் பத்து வருடங்கள் பொறுப்புள்ள பதவியை வகித்திருப்பின் அவரைச் சபை பதிவு செய்யப்பட்ட உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும்.

(ஈ) இவ்விதிகளின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் அல்லது அவற்றுக்குச் சமமானது என மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் தகைமைகளைப் பெற்ற எவரும் சபையினால் மாணவ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. (அ) எவ்வகை உறுப்புரிமைக்கும் சேர்க்கப்படுவதற்கான ஒரு விண்ணப்பம் யாக்க உறுப்பினர் மூவரினால் முன்வைக்கப்பட்டு, சபை அவ்வப்போது குறிப்பிடும் படிவத்தில் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். சகா உறுப்பினராகச் சேர்க்கப்பட வேண்டிய விண்ணப்பத்தை பொறுத்த மட்டில் அதனை இரண்டு சகா உறுப்பினர்கள் முன்வைத்தல் வேண்டும்.

(ஆ) சபை உறுப்பினர் இடாப்பு ஒன்றை வைத்திருக்கும்.

4. சபை ஒவ்வொரு உறுப்பினருக்கும் உறுப்புரிமைச் சான்றிதழை மன்றத்தின் முத்திரை பதிக்கப்பெற்ற மன்றத்தினால் அவ்வப்போது குறிப்பிடப்படும் வடிவம் கொண்ட படிவத்தில் வழங்கும். அத்தகைய சான்றிதழ் மன்றத்தின் உடைமையாக இருக்கும் என்பதோடு அதனைப் பெற்றவரது மரணம் தவிர்ந்த வேறேதேனும் விதத்தில் உறுப்பினராக அல்லாது நீங்கிய ஏழு நாட்களுள் அதனை மன்றத்துக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. உறுப்பினர் ஒருவர் தாம் உறுப்புரிமையைக் கைவிட விரும்புவதாக கௌரவ செயலாளருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் தெரிவித்து, சந்தாக் கட்டண மிகுதிகள் யாவற்றையும் செலுத்தினால் ஒரு நபர் உறுப்பினராக இருத்தல் முடிவுறும்.

6. உறுப்பினராக இருந்து விலகிய எந்நபரும் அவர் முன்பு இருந்த உறுப்பினர் பதவிக்கே புதிய உறுப்பினராக மன்றத்தினால் மீளவும் சேர்க்கப்படலாம்.

7. (அ) பிரவேசக் கட்டணங்கள், வருடாந்த சந்தாக்கள் மற்றும் கட்டணங்களுக்கான தொகைகள் யாவும் இவ்விதிகளின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டனவாக இருக்கும் ;

(ஆ) உறுப்பினராகச் சேர்ப்பதென சபை முடிவு செய்யும் எந்த நபரும் அவ்வாறு சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாத காலத்தினுள் தமது பிரவேசக் கட்டணத்தையும் வருடாந்த சந்தாவையும் செலுத்துதல் வேண்டும் ;

(இ) உறுப்பினர் ஒருவர் செலுத்த வேண்டிய வருடாந்த சந்ததாவையும் மற்றெந்த வருடாந்த கட்டணங்களையும் நடப்பு வருடத்துக்கு முன்னரே செலுத்திவிட வேண்டும். அவ்வருடத்தின் மாச்சு மாதம் முதலாம் திகதி வரையில் செலுத்தப்பட்டிராவிட்டால், கௌரவ பொருளாளர் அந்த உறுப்பினருக்கு நினைவுபடுத்த குறிப்பு ஒன்று அனுப்புவார். நடப்பு வருடத்தின் யூன் மாதம் முதலாம் திகதி வரை செலுத்தப்படாவிட்டால்,

கௌரவ பொருளாளர் அந்த உறுப்பினருக்கு அறிவித்தல் ஒன்றை பதிவுத் தபாலில் அனுப்புவார். அந்த அறிவித்தலிருந்து ஒரு மாதத்துக்குள் எல்லா மிகுதிகளையும் செலுத்தாவிட்டால், அத்தகைய நபர் மன்றத்தின் உறுப்பினர் பதவியை இழந்தவராவார். அவ்வாறு பணம் செலுத்தாமல் இருந்தமைக்கு நியாயமான காரணம் இருந்ததென சபை திருப்திப்படுமிடத்து அந்நபரை மீளவும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் ;

(ஈ) உறுப்பினர் ஒருவரது வயது முதுமை, நோய், இயலாமை அல்லது வேறு போதிய காரணத்துக்காக தமது சீவியத் தொழிலைப் பார்க்க முடியாது அல்லது வருவாயுள்ள தொழிலில் ஈடுபட முடியாதிருப்பின் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வருடாந்த சந்தா முழுவதையும் அல்லது ஒரு பாகத்தையேனும் நீக்கிவிடும்.

8. (அ) மன்றத்தின் உத்தியோகத்தர் சபை பின்வருவோரைக் கொண்டிருக்கும் :-

(i) கௌரவ தவைர் ;
(ii) கௌரவ உடனடி முன்னைய தலைவர் ;
(iii) கௌரவ சிரேஷ்ட உப தவைர் ;
(iv) கௌரவ உப தவைர் ;
(v) கௌரவ செயலாளர்கள் இருவர்(2) ;
(vi) கௌரவ பொருளாளர் ;
(vii) கௌரவ உதவிப் பொருளாளர்.

(ஆ) மன்றத்தின் குழுவில் 11 குழு உறுப்பினர்கள் உள்ளடங்குவார்கள். ஆளுநர் சபை மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் சபையினரையும் குழு உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருக்கும் ;

(இ) சகா உறுப்பினர்கள் மாத்திரமே கௌரவ தலைவர், கௌரவ சிரேஷ்ட உப தலைவர், கௌரவ உப தலைவர் பதவிகளை வகிக்கும் தகைமை பெற்றிருப்பார் ;

(ஈ) முன்னைய வருட இறுதியில் கௌரவ சிரேஷ்ட உப தலைவராகப் பதவி வகித்த ஒருவரே கௌரவ தலைவராக இருப்பார். அத்தகைய உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தாற்போல் இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் கௌரவ தலைவர் பதவியை வகிக்காதிருக்கலாம். ஆயினும், சபைக்கான இரு பதவிக் காலங்கள் கழிந்த பின்னர் அப்பதவிக்கு அவர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம் ;

(உ) சபையில் குறைந்தது இரண்டு பதவிக் காலங்கள் பணியாற்றிய ஒரு உறுப்பினர் மாத்திரமே கௌரவ சிரேஷ்ட உப தலைவராக தெரிவு செய்யப்படுவதற்கு அருகதை பெற்றிருப்பார். அத்தகைய உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தாற்போல் இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் கௌரவ சிரேஷ்ட உப தலைவர் பதவியை வகிக்காமல் இருத்தல் வேண்டும். ஆயினும், சபைக்கான ஒரு பதவிக் காலம் கழிந்த பின்னர் அத்தகைய பதவிக்கு அவர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம் ;

(ஊ) சபையில் குறைந்தது ஒரு வருடமேனும் பணியாற்றியிருந்த ஒரு உறுப்பினரே கௌரவ உப தலைவராகத் தெரிவு செய்வதற்குத் தகைமை பெற்றிருப்பார். அத்தகைய உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தாற்போல் இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் கௌரவ உப தலைவர் பதவியை வகிக்காதிருக்கலாம். ஆயினும், ஒரு பதவிக் காலம் கழிந்த பின்னர் அத்தகைய பதவிக்கு அவர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம் ;

(எ) முன்னைய பதவிக் கால இறுதியில் கௌரவ தலைவர் பதவியை வகித்தவரே கௌரவ உடனடி முன்னைய தலைவராவார் ;

(ஏ) சபையில் குறைந்தது ஒரு பதவிக் காலமேனும் பணியாற்றிய சகா கூட்டு உறுப்பினர் மாத்திரமே கௌரவ செயலாளர், கௌரவ உதவிச் செயலாளர், கௌரவ பொருளாளர் அல்லது கௌரவ உதவிப் பொருளாளர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் தகைமை பெற்றிருப்பார். அத்தகைய உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தாற்போல் இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் வகித்த பதவியை வகிக்காதிருத்தல் வேண்டும். ஆயினும், சபைக்கான ஒரு பதவிக் காலம் கழிந்த பின்னர் அவர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம் ;

(உ) மன்றத்தின் கௌரவ தலைவர், கௌரவ உடனடி முன்னைய தலைவர், கௌரவ சிரேஷ்ட உப தலைவர், கௌரவ உப தலைவர், கௌரவ உதவிச் செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ உப பொருளாளர் பதவிகளுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்களுக்கு தொடர்ச்சியாக இரண்டு பதவிக் காலங்கள் தேர்தலின்றி அப்பதவியை வகிக்க முடியும் ;

(ஊ) வருடாந்த பொதுக் கூட்டங்கள் இரண்டுக்கு இடையிலான காலப்பகுதியானது மன்றத்தின் ஒரு பதவிக் காலமாக கருதப்படும்.

09. (அ) கற்கைகள் சபைத் தலைவராக ஒரு சகா உறுப்பினர் மாத்திரமே தெரிவு செய்யப்படலாம். அத்தகைய உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தாற்போல் இரண்டு பதவிக் காலங்களுக்கு மேல் அப்பதவியை வகிக்காதிருக்கலாம். எனினும் ஒரு வருடம் கழிந்த பின்னர் அத்தகைய பதவிக்கு மீண்டும் தெரிவு செய்யப்படலாம் ;

(ஆ) கற்கைகள் சபைத் தலைவர் சபையின் பதவி வழி உறுப்பினராக இருப்பார்;

10. (அ) சபையில் பதவி வகிப்பவர்கள் உட்பட பத்தொன்பது உறுப்பினர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள் என்பதோடு, அத்தகைய உறுப்பிர்களுள் ஒருவர் கற்கைகள் சபைத் தலைவராக இருப்பார் ;

(ஆ) சபை உறுப்பினர்களில் குறைந்தது மூன்று பேர்களேனும் சகா உறுப்பினர்களாகவும், மூன்று பேர் யாக்க உறுப்பினர் அல்லாதவராகவும் இருப்பார்.

11. மேலே குறிப்பிடப்பட்ட பதவியினரையும் குழு உறுப்பினர்கள் எட்டு பேரையும் தெரிவு செய்யும் அருகதை யாக்க உறுப்பினர்களுக்கு மாத்திரமே இருக்கும்.

12 (அ) பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் மாணவ உறுப்பினர்களும் சபைக்குத் தங்கள் பிரதிநிதிகளாக முறையே குறைந்தது பதிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினரையும் ஒரு மாணவ அங்கத்தவரையும் தெரிவு செய்யும் அருகதை பெற்றிருப்பர்.

(ஆ) அத்தகைய உறுப்பினர்கள் சபை கூட்ட அறிவித்தல்களைப் பெறவும் அதில் பங்குபற்றவும் அருகதை பெற்றிருப்பர். எனினும், வாக்களிக்க முடியாது. ஒழுக்காற்று விசாரணை எதிலும் அல்லது அது தொடர்பான கலந்துரையாடல் எதிலும் அவர்கள் பிரசன்னமாக இருக்கவோ பங்குபற்றவோ மாட்டார்கள்.

13. சபை உறுப்பினர் ஒருவர் மன்ற உறுப்பினராக இல்லாதிருத்தல் அல்லது கௌரவ தலைவருக்கு அல்லது கௌரவ செயலாளருக்கு கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகுவதற்கான விருப்பத்தை தெரிவித்திருந்தால் அவர் பதவி வகிக்காது நின்று கொள்வார்.

14. (அ) கௌரவ தலைவர், கௌரவ சிரேஷ்ட உப தலைவர், கௌரவ செயலாளர் அல்லது கௌரவ பொருளாளர் பதவி மரணத்தின்போது அல்லது பதவி விலகலின்போது ஏற்படும் அத்தகைய வெற்றிடம் நிலைமைக்கேற்ப கௌரவ சிரேஷ்ட உப தலைவர், கௌரவ உதவிச் செயலாளர் அல்லது கௌரவ உதவிப் பொருளாளரினால் அடுத்த சபை பதவி ஏற்கும் வரை நிறைவு செய்யப்படும் ;

(ஆ) சபையின் வேறெந்த உறுப்பினரது மரணம் அல்லது பதவி விலகல் அல்லது விதி 14(அ) இன் செயற்பாடு காரணமாக அல்லது வேறெதற்காகவும் வெற்றிடம் ஏற்பட்டால் சபை அப்பதவிக்கு ஒரு உறுப்பினரை நியமிக்கும் ;

(இ) விதி 8 இன் செயற்பாட்டுக்காக உறுப்பினர் ஒருவர் எந்த ஒரு பதவியையும் வகித்த காலத்தைக் கணக்கிடுகையில், அவ்விதி காரணமாக அத்தகைய உறுப்பினர் அத்தகைய பதவியிலிருந்த காலம் கணிக்கப்படாது என்பதுடன், முன்னைய பதவி எதிலும் இருந்திருந்தால் சபையின் எஞ்சிய பதவிக் காலம் வரை அவர் அதனை வகித்தார் எனக் கருதப்படும் ;

15. (அ) சபை குறைந்தது மாதம் ஒரு முறையேனும் கூடும் என்பதுடன், சபையின் அடுத்த கூட்டத்துக்கான திகதி இயன்றவரையில் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் நிர்ணயிக்கப்படும்.

(ஆ) கௌரவ தலைவரினால் பணிக்கப்பட்டால் அல்லது சபையின் குறைந்தது ஆறு உறுப்பினர்களால் ஒப்பமிடப்பட்ட வேண்டுகோள் ஒன்று கிடைக்கப்பெற்றிருந்தால், கௌரவ தலைவரினால் குறிப்பிடப்பட்ட அல்லது அத்தகைய வேண்டுகோளில் காணப்பட்ட விடயம் எதனையும் ஆராய சபையின் அதிவிசேட கூட்டம் ஒன்று கௌரவ செயளாளரினால் கூட்டப்படும். அத்தகைய கூட்டம் நடைபெறும் திகதி, நேரம், இடம் ஆகியவற்றுடன் அதில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள விடயம் பற்றியும் சபை உறுப்பினர் அனைவருக்கும் குறைந்தது 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் முன்னறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(இ) சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் ஆறு உறுப்பினர்களாக இருக்கும். (யாக்க உறுப்பினர்கள் அல்லாதோர் நீங்கலாக).

16. (அ) சபை / மன்றத்தின் தலைவர் மற்றும் கௌரவ உடனடி முன்னைய தலைவர் தவிர்ந்த வேறெந்தப் பதவித் தேர்வுக்கும் தகைமை உள்ள யாக்க உறுப்பினர் எவரையும் எந்த இரண்டு யாக்க உறுப்பினர்களும் நியமிக்கலாம்;

(ஆ) சபைக்குத் தெரிவு செய்வதற்காக விதி 12 (அ) வின் பிரகாரம் முறையே எந்தப் பதிவு செய்யப்பட்ட உறுப்பினரையும், எந்த மாணவ உறுப்பினரையும் பதிவு செய்யப்பட்ட எந்த இரு உறுப்பினரும், எந்த இரு மாணவ உறுப்பினரும் நியமிக்கலாம் ;

(இ) அத்தகைய நியமனப் பத்திரங்கள் எழுத்தில் இருக்கும் என்பதோடு, முன்மொழிபவர், துணைமொழிபவர் இருவராலும் கையொப்பமிடப்பட்டிருக்கும். வருடாந்த சந்தாப் பணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் முழுமையாக செலுத்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் தெரிவு செய்வதற்கு இணைந்த விதிகளின் படி தாம் தகைமை பெற்றவர் எனவும் தெரிவு செய்யப்பட்டால் சபையில் பணியாற்ற இசைவதாகவும் அபேட்சகர் உறுதியுரை தந்து ஒப்பமிட்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) சபையின் தேர்ந்தலுக்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் அத்தகைய நியமனப் பத்திரங்கள் கௌரவ செயலாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் ;

(உ) சபை அதன் இறுதிக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம், கௌரவ தலைவர், கௌரவ முன்னைய உடனடி தலைவர் பதவிகள் நீங்கலாக, சபையின் பதவிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அபேட்சகரை நியமிக்கலாம். அத்தகைய நியமனத்தைப் பெற்ற அபேட்சகர் முன்னரேயோ அல்லது இரண்டு வாரங்களுக்குள்ளோ தாம் தெரிவு செய்யப்படுவதற்கு இயைந்த விதிகளின் படி தகைமை பெற்றவர் எனவும் தெரிவு செய்யப்பட்டால் சபையில் பணியாற்ற இசைவதாகவும் உறுதியுரை தந்தாலே தவிர அத்தகைய நியமனம் எதுவும் செல்லுபடியற்றதாகும்.

17. (அ) விதி 16 இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட அபேட்சகர் எல்லோரும் அடங்கிய பட்டியலும் வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தலில் சேர்க்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) எந்த உறுப்பினரும் நடப்புக் கலண்டர் வருடத்துக்குரிய சகல கட்டணங்கள், சந்தாக்களை முன்னரே செலுத்தியிருந்தாலே தவிர வாக்களிக்க அனுமதி பெறமாட்டார் ;

(இ) வருடாந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் உத்தியோகத்தர் தெரிவே முதலாவது அம்சமாக இருக்கும். இரகசிய வாக்களிப்பே இடம்பெறும் ;

(ஈ) வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் தயாரித்தல் போன்றவற்றையும் வாக்குகளை எண்ணுதலும் கௌரவ சிரேஷ்ட உப தலைவரது (தெரிவாகவுள்ள தலைவர்) பொறுப்பாக இருக்கும். நியமனப் பத்திரம் எதனதும் செல்லுபடியாகும் தன்மை, அபேட்சகர் எவரதும் தகைமை, வாக்களிப்பதற்கு உறுப்பினருக்குள்ள உரிமை போன்றவை தொடர்பாக அவரது முடிவே இறுதியானது. அவர் தமக்கு உதவி புரிவதற்காக எப்பதவிக்கும் அபேட்சகராக இராத இரண்டு பேருக்கு மேற்படாத சகா உறுப்பினர்களை நியமித்துக்கொள்வார்.

(உ) ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு ஒருவர் பிரேரணை செய்யப்படலாம். ஆயினும், அவர் ஒரு பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், மற்றைய பதவிக்காக அவர் பெற்ற வாக்குகள் உதாசீனம் செய்யப்படும். இவ்விதியை நடைமுறைப்படுத்துகையில் கௌரவ சிரேஷ்ட உப தலைவர், கௌரவ உப தலைவர், கௌரவ உதவிச் செயலாளர், கௌரவ பொருளாளர், கௌரவ உதவிப் பொருளாளர் ஆகிய ஏனைய பதவிகளுக்காக வழங்கப்பட்ட வாக்குகள் முறைப்படி எண்ணப்படும் ;

18. சனவரி 1ஆம் திகதியிலிருந்து திசெம்பர் 31ஆம் திகதி வரை மன்றத்தின் நிதியாண்டு காலமாக இருக்கும்.

19. சபை உறுப்பினர்கள் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத் திகதியிலிருந்து அடுத்த வருடாந்த பொதுக் கூடடத்தில் அவர்களது பதவிக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்படும் திகதி வரை பதவி வகிப்பர்.

20. (அ) மன்ற உறுப்பினரது வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் மாச்சு மாத முடிவுக்கு முன் நடத்தப்படுதல் வேண்டும். வருடாந்தப் பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் பின்வருவன உள்ளடங்கியிருக்கும்;

- உத்தியோகத்தர் சபை மற்றும் சபையின் குழு உறுப்பினர்களது தெரிவு ;
- முன்னைய வருட ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்களையும் ஏற்றுக்கொள்ளும் ;
- மற்றும் தக்க அறிவிப்புத் தரப்பட்டுள்ள ஏனைய வியங்கள்.

(ஆ) வருடாந்தப் பொதுக் கூட்டம் மற்றும் பொதுக் கூட்டம் ஆகியன நடக்கும் திகதி, நேரம் , இடம் ஆகியன பற்றிய அறிவிப்பு எல்லா உறுப்பினர்களுக்கும் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்னர் அறியத்தரப்படும் ;

(இ) வருடாந்தப் பொதுக் கூட்டம் மாச்சு மாதத்தில் நடைபெற்றிராவிட்டால், வருடாந்தப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்காகவும் அதன் எல்லாக் கருமங்களையும் நடத்துவதற்காகவும் உள்ள 21ஆம் விதியின்படி மன்ற உறுப்பினர்களது விசேட பொதுக் கூட்டம் கூட்டப்படலாம் ;

(ஈ) வருடாந்த பொதுக் கூட்டம் நீங்கலாக மன்ற உறுப்பினர்களுக்கு பொதுக் கூட்டங்கள் குறைந்தது மூன்றேனும் நடத்தப்படுதலை சபை கவனிக்கும்.

21. (அ) கௌரவ தலைவரினால் பணிக்கப்பட்டால் அல்லது யாக்க உறுப்பினருள் குறைந்தது 15 பேரினால் விடுக்கப்பட்ட எழுத்துமூல வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதும், கௌரவ தலைவரினால் அல்லது அவ்வேண்டுகோளில் குறிக்கப்பட்ட எவ்விடயத்தையும் ஆராய்தற்கு கௌரவ செயலாளர், மன்ற உறுப்பினர்களது ஒரு விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டுவார்.

(ஆ) அத்தகைய கூட்டங்கள் நடக்கும் திகதி, நேரம், இடம் பற்றியும் அவற்றில் மேற்கொள்ளப்படவுள்ள விடயம் பற்றியும் எல்லா உறுப்பினர்களுக்கும் குறைந்தது மூன்று நாள் அறிவிப்புத் தரப்படும் ;

22. (அ) மன்ற உறுப்பினர் கூட்டங்கள் அனைத்திலும் கௌரவ தலைவர் தலைமை வகிப்பார். அவர் வராதவிடத்து கௌரவ உடனடி முன்னைய தலைவர், கௌரவ சிரேஷ்ட உப தலைவர் அல்லது கௌரவ உப தலைவர் அல்லது அவர்களும் வராதவிடத்து வருகை தந்த உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட ஆளுநர் சபை உறுப்பினர் ஒருவர் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்;

(ஆ) மன்ற உறுப்பினர் கூட்டத்துக்கான நிறைவு எண் யாக்க உறுப்பினர் எண்ணிக்கையில் கால் வாசியாகும். அதற்கென குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரை மணித்தியாலத்துக்குள் நிறைவு எண் இருக்காவிட்டால் கூட்டம் ஒத்திவைக்கப்படும். அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட கூட்டமானது அதற்கென குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரை மணித்தியாலத்தில் நிறைவு எண் கிடையாதிருந்தால் வருகை தந்துள்ளவர்களே நிறைவெண்ணாகும்;

(இ) மன்ற உறுப்பினர் கூட்டங்கள் எல்லாவற்றிலும் யாக்க உறுப்பினர் அல்லாதோர் வருகை தந்து பங்குபற்றலாம். எனினும், 12ஆம் விதியில் குறிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மாத்திரம் அவர்கள் தமது வாக்கை வழங்க முடியும்.

23. (அ) சபை பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் ஒரு கற்கைச் சபையினையும் மன்றத்தின் குறிக்கோள்கள் அல்லது சபையின் கருமங்களுடன் தொடர்புபட்ட குறிப்பிட்ட விடயங்களில் மன்றத்துக்கு ஆலோசனை வழங்கவும், உதவவும் ஏனைய சபை அல்லது குழுக்களை சபை நியமிக்கும் ;

(ஆ) சட்டத்தின் 3(அ), (ஆ), (உ) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளதன்படி கற்கைச் சபை தொல்பொருளியலை மாணவர்களுக்கு புகட்டுதல், பரீட்சைகளை நடாத்துதல் அதனுடன் தொடர்புபட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தும். கௌரவ தலைவர் பதவி வழியாக கற்கைச் சபையின் ஒரு உறுப்பினராக இருப்பார் ;

(இ) மன்ற உறுப்புரிமைக்குத் தகைமை பெறும் பரீட்சைகளுக்கான கற்கை நெறிகளை நடத்துவதற்கும் அத்தகைய பரீட்சைகளை நடத்துவதற்கும் சபை, கற்கைச் சபையினைப் பொறுப்பாக்கலாம் ;

24. ஒவ்வொரு ஆண்டிலும் பூர்த்தி செய்யப்பட்ட தொல்பொருளியல் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிக்காக ஒவ்வொரு வருடமும் மன்றம் ஒரு தங்கப் பதக்கத்தை பரிசாக வழங்கும்.

**அட்டவணை - 01**

வருடாந்த சந்தாக்களும் கட்டணங்களும்

| *உறுப்பினர் நிலை* | *பிரவேசக் கட்டணம்* | *வருடாந்த சந்தா* |
|---|---|---|
| | *ரூ. ச.* | *ரூ. ச.* |
| உடனொத்த உறுப்பினர் | 750 0 | 750 0 |
| உறுப்பினர் | 500 0 | 500 0 |
| கூட்டு உறுப்பினர் | 250 0 | 250 0 |
| பதிவு உறுப்பினர் | 100 0 | 100 0 |
| மாணவ உறுப்பினர் | 50 0 | 50 0 |

**அட்டவணை - 2**

உறுப்பினர் பதவி பெறுவதற்கான தகைமைகள்

1. இலங்கை தொல்பொருளியல் மன்றத்தின் சகா உறுப்பினராய் பதிவு செய்வதற்கான தகைமை -

(அ) பத்து வருடங்களுக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்கு மன்றத்தின் உறுப்பினராக உறுப்புரிமை பெற்றிருத்தல்.

2. இலங்கை தொல்பொருளியல் மன்றத்தின் உறுப்பினராய் பதிவு செய்வதற்கான தகைமை -

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது நிறுவனம் ஒன்றின் தொல்பொருளியல் பற்றிய பட்டமாணிப் பின் பட்டமும், உடனொத்த உறுப்பினரின் மேற்பார்வையின் கீழ் உகந்த அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் தொல்பொருளியலாளராக இரண்டு வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அனுபவம் பெறுதல் பட்டமாணிப் பின் பட்டம் பெறமுன்போ அல்லது பெற்ற பின்போ பெறலாம்

3.இலங்கை தொல்பொருளியல் மன்றத்தின் கூட்டு உறுப்பினராய் பதிவு செய்வதற்கான தகைமை -

(அ) தொல்பொருளியல் பற்றிய விசேட பட்டம் மற்றும் பதிவு உறுப்பினராக ஐந்து வருடங்கள் சேவை செய்திருத்தல் ; அல்லது

(ஆ) தொல்பொருளியல் பற்றிய பட்டப்பின் படிப்பில் பட்டம் பெற்றிருத்தல் ;
அல்லது

(இ) இலங்கை தொல்பொருளியல் மன்றத்தினால் நடத்தப்படும் தொழிற்பரீட்சையில் சித்தியெய்துதல்.

4. இலங்கை தொல்பொருளியல் மன்றத்தின் பதிவு உறுப்பினராகும் தகைமை -

(அ) மாணவ உறுப்பினராக ஐந்து வருட காலம் சேவையாற்றியிருத்தல்.
அல்லது ;

(ஆ) உடனொத்த உறுப்பினரதோ, உறுப்பினரதோ கீழ் அரச அல்லது தனியார் நிறுவனத்தில் தொழிலாகவோ தொழிநுட்பத் தரத்திலோ பத்து வருட அனுபவம் பெற்றிருத்தல்.

5. இலங்கைத் தொல்பொருளியல் மன்றத்தின் மாணவ உறுப்பினராகும் தகைமை –

(அ) தொல்பொருளியல் பற்றிய விசேட பட்டப் பாடநெறி அல்லது தொல்பொருளியல் பாடமாக உள்ளடங்கும் சாதாரண பட்ட பாடநெறியில் சேர்தல் ;

அல்லது

தொல்பொருளியல் பற்றிய பட்டப்பின் படிப்புப் பாடநெறியில் சேர்தல்.

* சில நிறுவனங்களில், சம்பிரதாயங்கள் மூலம் தொல்பொருளியல் பாடநெறியானது வெவ்வேறு விதமாக அறிமுகம் செய்யப்படுகின்றது. அதேபோன்று அறிமுகம் கொண்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் தொல்பொருளியலுக்குச் சேர்ந்தவையாவென ஆளுநர் சபையின் தீர்மானத்தின்மேல் எடுத்துக் கொள்ளப்படும்.

# தொல்பொருளியலைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் மேற்பார்வையின் கீழ் தொழில்நுட்ப ரீதியில் செயல்படுதல் என்பது தொல்பொருளியல் சேவைக்கு முக்கியமாக உதவும் வரைவாளர், நில அளவீடு, நிழற்படக் கலை, கண்டெடுத்தவையைக் கூர்ந்து ஆராய்தல், அகழ்தல் ஆராய்வு போன்றவையைவிட வேறு கருமங்களும் இடைக்கிடை மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

20-711

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.